மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தனி பிரிவு ஏற்படுத்துவதன் மூலமாகத் தான் அந்த துறைக்கு முக்கியத்துவம் கிடைக்கும் என்ற வகையில் தான் அரசு இப்போது ஆணை இட்டிருக்கிறது. அதற்காக குறைந்த பட்சம் 10 படுக்கைகள் தேவை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எனவே இப்போது இருக்கிற நிதிப் பிரச்சினையை மனதில் வைத்துத்தான் 4 படுக்கைகள் மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் ஏற்கெனவே இருந்த சர்ஜரி டிபார்ட்மென்டிலேயிருந்து அவர்களுக்கு 4 படுக்கைகள் ஒதுக்கி கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த மருத்துவ மனையில் எந்தெந்த படுக்கைகள் தேவையில்லாத அளவுக்கு எந்தெந்த துறையிலே இருக்கிறது என்று சொன்னால் அதை மாற்றிக் கொடுப்பதற்கு அரசு நிச்சயமாக நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 265, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

265—

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்துதல்.

*10141—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் சத்திரக்குடி மற்றும் பார்த்திபனூர் ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இப்பொருள் குறித்து ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1993 ஏப்ரல் 7]

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்துவதன் வாயிலாக அங்கே இருக்கிற மக்களுக்கு மகப்பேறு மருத்துவ வசதி கிடைக்கிறது. படுக்கை வசதிகள் ஏற்பட வாய்ப்பாக இருக்கிறது. மேலும் அப்பகுதியிலுள்ள மக்கள் சிறந்த முறையில் வைத்தியம் பெறுவதற்காக லேப், எக்ஸ்ரே போன்ற கருவிகள் எல்லாம் அங்கே தரம் உயர்த்துவதனால் ஏற்படுகிறது. நான் இங்கே குறிப்பிட்ட பார்த்திபனூர் மானாமதுரைக்கும் பரமக்குடிக்கும் நடுவில் இருக்கிறது. தேசிய நெடுஞ்சாலையில் இருக்கிறது. அப்பகுதியில் அதிகமாக பிற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். குறிப்பாக சொல்ல வேண்டுமானால் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக அந்த பார்த்திபனூர் பகுதியில் வசிக்கிறார்கள். அதேபோல சத்திரக்குடியும் இராமநாதபுரத்திற்கும் பரமக்குடிக்கும் நடுவில் இருக்கிறது. அங்கே தாழ்த்தப்பட்ட மக்கள் 50 விழுக்காடுகளுக்கு மேல் இருக்கிறார்கள். அது தேசிய நெடுஞ்சாலையில் இருப்பதால் அப்பகுதியில் உள்ள மக்கள் வசதி பெறுவதற்காக, 20 வருடங்களுக்கு மேலாக இருக்கிற அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை தரம் உயர்த்துவதற்கான வாய்ப்பு இல்லை என்று நான் ஏற்கனவே சொன்னேன். நிதிப் பிரச்சினை ஒரு பக்கம் இருந்தாலும் அந்தந்த பகுதியினுடைய தூரங்களை கணக்கிட்டு, மற்ற மருத்துவ மனைகள் எவ்வளவு தூரத்திலே இருக்கிறது என்பதை கணக்கிட்டு அதற்கு ஏற்ப தான் தரம் உயர்த்தப்பட வேண்டுமா, வேண்டாமா என்று முடிவு எடுக்கிறோம்.

இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதனுடைய முக்கியத்துவத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் ஒரு முறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்து அதைப் பற்றித் தீவிரமாகப் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

முற்பகல் 10-15

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வதாகக் கூறியதற்கு தொகுதி மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவ்வாறு ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்தும்போது அந்த பஞ்சாயத்து யூனியன் தலை நகரங்களில் இருக்கின்ற மருத்துவமனைக்கு முக்கியத்துவம் கொடுத்து அவைகளை வருகின்ற நிதி ஆண்டில் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுபரிசீலனை செய்யப்படும் என்று தான் சொல்லியிருக்கிறேன். முடிவு பரிசீலனை செய்த பின்பு உங்களுக்குத் தெரிவிக்கப்படும். இப்போது பஞ்சாயத்து தலை நகரங்களில் இருக்கின்ற மருத்துவமனைகளை தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுமா என்று கேட்டார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலேயும் எந்த மருத்துவ மனையைத் தரம் உயர்த்த வேண்டும், என்ன தேவை அங்கே இருக்கிறது என்பதைக் கணக்கிட்டுத்தான் நாம் செய்து கொண்டிருக்கிறோம். எனவே, அந்த அடிப்படையில் செய்வதே பொருத்தமாக இருக்கின்ற காரணத்தினால் தலை நகரத்திலே இருப்பது, பஞ்சாயத்து தலை நகரத்திலே இருக்கின்ற மருத்துவமனை என்ற நிலையை எடுத்துக் கொள்ளாமல் எங்கே அவசியம் இருக்கிறதோ, எங்கே தேவை இருக்கிறதோ அங்கே அதை செய்வதற்கான நடவடிக்கையைத் தொடர்ந்து மேற் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 266, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

266—

எட்டான்குளம் கிராமத்திற்குப் பேருந்து **வசதி**

*15101—: திரு. எஸ். எஸ். ராமசுப்பு:

மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஒன்றியம் எட்டான்குளம் கிராமத்திற்குச் செல்ல போதுமான பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

போதுமான பேருந்து வசதி ஏற்கனவே உள்ளது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானூர் ஒன்றியம் எட்டான் குளம் அருகில் 7 கிராமங்களுக்கு பஸ்கள் சென்று வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அதில் 1, 2 பஸ்கள் தான் மொத்தமாக விடப்பட்டிருப்பதால் அந்தப் பகுதியிலே ஏராளமான தாய்மார்கள், பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் திருநெல்வேலிக்கோ அல்லது மானூருக்குகோ செல்ல

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS